**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற நலிந்த நிலையிலுள்ள பதினோறு பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6,000/– வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண்.63

நாள் 18.02.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன வருடம் மாசி 6– ம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.98 செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள் 17.04.1997
2. அரசாணை (நிலை) எண்.151 செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள் 13.07.2000
3. அரசாணை (நிலை) எண்.236 செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்–4)த் துறை, நாள் 03.10.2006
4. அரசு ஆணை (நிலை) எண்.191 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை, நாள் 14.09.2011
5. பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப உதவி நிதி பரிந்துரைக் குழு கூட்ட குறிப்புகள் நாள் 7.01.2013.

*****

**ஆணை:**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் பத்திரிகைத் துறையில் நீண்ட காலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்ட பத்திரிகையாளர்கள், பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், அவர்களது சமூகப்பணியை கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதியுதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் அளிக்கும் வகையில் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

2) மேலே 5–ல் படிக்கப்பட்ட பத்திரிக்கையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வுதியம் மற்றும் குடும்ப உதவி நிதி பரிந்துரைக் குழு கூட்ட குறிப்புகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நலிவடைந்த பதினோறு பத்திரிகையாளர்கள் பத்திரிகைத்துறையில் 20 ஆண்டுகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளதாகவும் இவர்கள் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் இவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கு 21.12.2012 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்குவதற்கான பரிந்துரை குழு இவர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் திங்கள் தோறும் வழங்க பரிந்துரை அளித்துள்ளது.

| வ. எண். | பத்திரிகையாளர்களின் பெயர் |
|---|---|
| 1. | திரு. டி. ஆர். சதாசிவம் |
| 2. | திரு. C.S. நடராஜன் |
| 3. | திரு. P. பாலுசாமி |
| 4. | திரு. A.K. அலீ அஹ்மது |
| 5. | திரு. K.E. சந்திரசேகரன் |
| 6. | திரு. கி.அ. கோபாலன் |
| 7. | திரு. விக்ரமன் |
| 8. | திரு. சி. தங்கவேலன் |

| | |
|---|---|
| 9. | திரு. ஆர். பெரியசாமி |
| 10. | திரு. கே. கணேசன் |
| 11. | திரு. சா. அசரியா |

3) மேற்குறிப்பிட்ட பத்திரிகையாளர்களுடைய விண்ணப்பங்கள் பரிந்துரைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும்முன் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையும் பெறப்பட்டுள்ளது.

4) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், மேலே பத்தி 2–ல் உள்ள அட்டவணையில் வரிசை எண். 1 முதல் 11 வரை குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு, மேலே 5–ல் படிக்கப்பட்ட பரிந்துரைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பார்வை–4ல் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் மாத ஓய்வூதியம் ரூ.6,000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதற்கொண்டு வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை 2012–13ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

> "2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்–60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் –I திட்டத்தில் சேராதது – AH. தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம்–27. ஓய்வூதியங்கள்–05, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"(த.தொகு.2235 60 102 AH 2705)

6) மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.6,000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள் பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகையாளர்களுக்கு பெற்றுத் தர உரிய ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7) ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களின் நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலோ அல்லது இயற்கை எய்தினாலோ, அது குறித்த முழுமையான அறிக்கையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை–9 அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை–9 அவர்களால் மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ஓய்வூதியம் குறித்த விவரங்களை உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

9) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.7390/நிதி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை/2012, நாள் 18.02.2013 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

1) திரு. டி.ஆர்.சதாசிவம்,
பி–70/8 ரேஸ்கோர்ஸ் காலனி,
புதுநத்தம் சாலை, மதுரை.

2) திரு.சி.எஸ். நடராஜன்,
29, இரண்டாவது மெயின்ரோடு,
அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை.

3) திரு. பி. பாலுசாமி,
4 காமாட்சியம்மன் கோவில் தெரு,
விராட்டிபத்து, மதுரை–10.

4) திரு. ஏ.கே. அலி அஹ்மது,
264 கடைவீதி, மீனம்பூர்,
விழுப்புரம் மாவட்டம்.

5) திரு.கே.இ.சந்திரசேகரன்,
எண்.31/15ஏ, விடையல், கருப்பூர் அஞ்சல்,
(வழி) திருச்சேறை, திருவாரூர் மாவட்டம்,

6) திரு.கி.அ. கோபாலன்,
96, அண்ணாமலை, புபலகம்,
ஊற்றங்கரை, கிருஷ்ணகிரி–635 207.

7) திரு.விக்ரமன்,
பழைய எண்.2, புதிய எண்.3 ஜெயசங்கர் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33.

8) திரு.சி. தங்கவேலன்,
சி/6 முதல் அவென்யூ, அசோகா காலனி
அசோக் நகர், சென்னை–83.

9) திரு.ஆர். பெரியசாமி,
34/1, 2–வது பிரதான சாலை, ஜெய்நகர்,
அரும்பாக்கம், சென்னை–106.

10) திரு.கே. கணேசன்,
திருச்சேறை வழி,
விடையல் கருப்பூர் அஞ்சல்,
வலங்கைமான் தாலுகா,
திருவாரூர் மாவட்டம்– 612 005,

11) திரு.சா. அசரியா,
3/36 மூப்பனார் தெரு, நெசவாளர் நகர்,
ஜல்லடன்பேட்டை,
சென்னை–600 100.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மதுரை/ சென்னை/ காஞ்சிபுரம்/ விழுப்புரம்/ திருவாரூர் / கிருஷ்ணகிரி
ஆணையாளர், கருவூல கணக்குகள் துறை, சென்னை–35
மாநில முதன்மை கணக்காயர், கணக்குகள் (ம) பணிவரவு, தமிழ்நாடு, சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர்கள், மதுரை/ சென்னை/ காஞ்சிபுரம்/ விழுப்புரம்/ திருவாரூர் / கிருஷ்ணகிரி
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–18.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர் , செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

<u>நகல்:</u>
நிதி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி)த் துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி த் துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 19/2/13